மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.130/2023</u>

2026 ம் ஆண்டு மார்ச் 02 ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிச்சாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.03.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்ன பரிகாரம் கேட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்ட இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 8 பிரதிவாதிகளின் தகப்பனாருமான சின்னான் என்பவர் எனது தோட்டத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு பின்னிட்டு அவரது மகன்களும் எனது தோட்டத்தில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில் 1ம் பிரதிவாதியின் கணவரான சின்னான் என்பவருக்கு ஐந்து செண்ட் பூமியை கிரயம் கொடுத்தார் என்றால் தொண்டுப்பட்டி 9 செண்ட் இருந்ததில் அதில் 5 செண்ட் பூமியை பொதுவில் என கண்டு கிரயம் கொடுத்தார் நான் சொல்வது தவறு என்றும், 1ம் பிரதிவாதியின் கணவருக்கு எனது

தகப்பனார் 5 சென்ட் பூமியை குறிப்பிட்ட செக்குபந்திகள் கண்டு தனியாக கிரயம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காங்கேயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.554/1985 ஆவணத்தில் உள்ள 3வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணம் தான் என் தகப்பனார் 1ம் பிரதிவாதியின் கணவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும் தற்போது கண் மங்கலாக தெரிவதால் படிக்க இயலவில்லை. மேற்படி என் தகப்பனார் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் 355 காலைக்கும் கிழமேல் பிஏபி வாய்க்காலுக்கும் தெற்கு, 356/4 நம்பர் காலைக்கு மேற்கு, என் பாக பூமிக்கு வடக்கும், கிழக்கும் இதன் மத்தியில் இருக்கும் பிஏபி காட்டு பூமியில் இருக்கும் விவசாயத்திற்கு பயன்படும் தொண்டுப்பட்டி நிலம் புஞ்சை ஏக்கர் 0.05 சென்ட் பூமியும், இதில் உள்ள மாவடை, மரவடை சகிதம் என வாசகங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் 9 சென்ட் பொதுவில் என்று தான் அதில் கண்டுள்ளது. கிரைய சொத்தில் ஐந்து வீடுகள் கட்டி பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. அந்த வீட்டில் பிரதிவாதிகள் குடியிருந்து வரிவகைகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.2 பட்டா ஆவணத்தில் சின்னான் என்பவருக்கு தெரியாமல் அவர் பெயரை சேர்த்து கூட்டு பட்டாவாக வாங்கி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சின்னான் என்பவர் தனிப்பட்ட முறையில் தாவா

சொத்தை கிரயம் பெற்றுள்ள நிலையில் அவர் கூட்டு பட்டா வாங்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்தை நாங்கள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் முதலில் தொண்டுபட்டி சாலை இருந்தது தற்போது அவைகள் அழிந்து போய் காலியிடமாக உள்ளது. நான் சொல்வது உண்மையல்ல என்றும், தற்போது பிரதிவாதிகள் அவர்கள் கிரைய சொத்தில் வீடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 9 சென்ட் பொது இடத்தில் தான் பிரதிவாதிகள் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள்.

6. பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டிற்கு எந்த பக்கத்தில் காலியிடங்கள் உள்ளது என்றால் வடபுறம் மேல்புறம், கிழபுரத்தில் உள்ளது. பிரதிவாதிகள் வீட்டிற்கு வடபுறத்தில் திருச்சி – கோவை சாலை உள்ளது. பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் கணவர் கிரையம் பெற்ற பூமியில் தான் வீடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல எனக்கும் அதில் 4 சென்ட் பூமி உள்ளது. பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும் விலை தற்போது அதிகரித்து விட்டதால் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்தில் எனக்கும் பங்கு உள்ளதாக நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7. 2013 ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் இந்த வழக்கு

பிரதிவாதிகளை ஒரு தரப்பினராக நாங்கள் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். 9 சென்ட் பூமி தனியாக உள்ளது உண்மையிலேயே பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்தில் எங்களுக்கு பாகம் இருந்திருந்தால் எங்கள் குடும்பத்தில் செய்து கொண்ட பாகப்பிரிவினையில் பிரதிவாதிகளையும் ஒரு தரப்பினராக நாங்கள் சேர்த்து இருப்போம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:34:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்